செய்தி வெளியீடு எண்: 877 நாள்: 03.12.2018

## செய்தி வெளியீடு

**மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், காமராஜர் சாலை, சென்னை–5.**
**அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் – 2018**
**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் துவக்க விழா மற்றும் பரிசளிப்பு விழா**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாள் **"அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக"** தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. டாக்டர். V. சரோஜா அவர்கள் "அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தை"** முன்னிட்டு மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியரின் விளையாட்டுப் போட்டிகளை, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விளையாட்டரங்கத்தில் இன்று (01.12.2018) காலை 9.30 மணிக்கு துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

**மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. டாக்டர். V. சரோஜா அவர்கள்** மைதானத்திற்கு சென்று கொடியேற்றி, பலூான்கள் மற்றும் புறாக்கள் ஆகியவற்றை பறக்கவிட்டு விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். மைதானத்தில் உள்ள அனைத்துவகை மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகளை சந்தித்து அவர்களை பாராட்டியும் பின்பு அவர்களுக்கு சிற்றுண்டியும் வழங்கினார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளி மாணவ / மாணவிகளுடைய உணவு செலவிற்கு தன்னுடைய சொந்த பணத்திலிருந்து நன்கொடையாக ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதினாயிரம்) வழங்குவதாக தெரிவித்தது மட்டுமல்லாமல் அந்த பணத்தை உடனே மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரிடம் வழங்கினார். **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. டாக்டர். V. சரோஜா அவர்கள்** கருணை உள்ளத்துடன் வழங்கிய நன்கொடை தொகைக்காக மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தின் சார்பாக மனம் மகிழ்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு செயலாளர், திரு. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. ப. மகேஸ்வரி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்களாக திரு. சிம்மசந்திரன், மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் திரு. ராமகிருஷ்ணன், அமர்சேவா சங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ / மாணவியர்களுக்கு **மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. டாக்டர். V. சரோஜா அவர்கள்** பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு செயலாளர், திரு. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. ப. மகேஸ்வரி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். திரு. ம. இராஜையா, இணை இயக்குநர் நன்றி தெரிவித்தவுடன் விழா இனிதே முடிவடைந்தது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**